**பெருநகர சென்னை மாநகராட்சி**

**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண்.29** **நாள்: 06.04.2024**

வருகின்ற பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, 100% வாக்குப்பதிவினை வலியுறுத்தி, சென்னை மாவட்டத்தில் உள்ள மூன்று பாராளுமன்றத் தொகுதிகளிலும் பல்வேறு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக இன்று (06.04.2024) பெருநகர சென்னை மாநகராட்சி, கோடம்பாக்கம் மண்டலம், தியாகராஜ சாலையில் (பாண்டி பஜார்) பல்வேறு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இதனை மாவட்ட தேர்தல் அலுவலர்/ கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் வாக்காளர்கள் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், வாக்களிப்பது நமது கடமை, உரிமை குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் கிராமிய கலை நிகழ்ச்சிகள், மேற்கத்திய இசை மற்றும் கலை நிகழ்ச்சிகள், மிமிக்கிரி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கோடம்பாக்கம் மண்டல அலுவலர் திரு.முருகேசன், செயற்பொறியாளர்கள் திரு.இனியன், திரு.பெரியசாமி உள்ளிட்ட அலுவலர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**